**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | |
| | : | Prosecution - | **PW-38** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : S.சுனில் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1979 of the 12th day of January 2024.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர். **1** ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**, 2** ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4** ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5** ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6** ம் எதிரி கேசவன்**, 7** ம் எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8** ம் எதிரி தமிழரசன்**, 10** ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11** ம் எதிரி கலைச்செல்வன்**, 12** ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**.**

**9** ம் எதிரி அஜீத்குமார் ஆஜர் இல்லை**. 9** ம் எதிரி சார்பில் குவிமுச பிரிவு **317** ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.**

**3** ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னையில் உள்ள வோடாபோன் ஐடியா லிமிடெட்., நிறுவனத்தில் பொதுமேலாளர் மற்றும் நோடல் அதிகாரியாக பணிபுரிகிறேன். நான் கடந்த 22.12.2020 அன்று இதே பணியில் இருந்தபோது, கரூர் நகர .........

காவல்துணை கண்காணிப்பாளர் அவர்களின் கடிதத்தை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மூலம் பெறப்பட்டு, அந்த வேண்டுகோள் கடிதத்தின்படி, கரூர் நகர கா.நி.கு.எண். 1031/2020 சம்மந்தப்பட்ட வழக்கு சம்மந்தமாக வோடாபோன் நெம்பர் 9943440887 என்ற எண்ணின் 17.09.2020 முதல் 18.09.2020 வரை காலக்கட்டத்திற்கான உள், வெளி அழைப்பு விவர அறிக்கை மற்றும் மேற்படி எண்ணின் வாடிக்கையாளர் விண்ணப்பப்படிவத்தின் நகல் ஆகியவற்றை கேட்டதின் அடிப்படையில், நான் என்னுடைய 23.12.2020 தேதியிட்ட கடிதம் மற்றும் சாட்சிய சட்டம் பிரிவு 65 பி சான்றிதழுடன், மேற்படி வாடிக்கையாளர் விண்ணப்பபடிவ நகல், மேற்சொன்ன அழைப்பு விவர அறிக்கையையும் நேரில் வந்திருந்த காவலரிடம் ஒப்படைத்தேன்.

மேற்சொன்ன மொபைல் எண். 9943440887 என்ற எண் ரமேஷ் பாலசுப்பிரமணி, த/பெ. பாலசுப்பிரமணி என்பவர் பெயரில் வழங்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன வாடிக்கையாளர் விண்ணப்ப படிவம் உண்மை நகல் அ.சா.ஆ.46. மேற்சொன்ன எண்ணிற்குரிய அழைப்பு விவர அறிக்கை அ.சா.ஆ.47. 65 பி சான்றிதழ் அ.சா.ஆ.48. மேற்சொன்ன ஆவணங்களை நான் கையெழுத்திட்டு வழங்கியுள்ளேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கு சம்மந்தமாக காவல்துணை கண்காணிப்பாளர் வேண்டுகோள் கடிதம், காவல் கண்காணிப்பாளர் மூலமாக 21.12.2020 தேதியில் பெறுவதற்கு முன்பாக இது சம்மந்தமான விண்ணப்பம் என் அலுவலகத்தை சேர்ந்த கார்த்திக் என்பவருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் ஞாபகமில்லை. கார்த்திக் என்பவர் இவ்வழக்கு சம்மந்தப்பட்ட மொபைல் எண்ணிற்குரிய விண்ணப்ப படிவம் நகல், அழைப்பு விவர அறிக்கை, 65 பி சான்றிதழ் ஆகியவற்றை இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியிடம் வழங்கியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி கார்த்திக் என்பவர் அளித்த ஆவணங்கள் மறைக்கப்பட்டு, நான் தாக்கல் .........

செய்துள்ள அ.சா.ஆ.46 முதல் 48 ஆவணங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கார்த்திக் என்பவர் எங்கள் நிறுவனத்தில் நோடல் அதிகாரி என்று சொன்னால் சரியல்ல.

நீதிமன்ற கேள்வி :- கார்த்திக் என்பவர் உங்கள் நிறுவனத்தில் என்ன வேலை செய்தார்?

பதில் - கார்த்திக் என்பவர் எனக்கு கீழ் பணிபுரியும் அதிகாரி. நான் பணியில் இல்லாத சமயத்தில் அவர் நோடல் அதிகாரியாக பணிபுரிவார்.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | |
| | : | Prosecution - | **PW-39** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : தாரணி | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1979 of the 12th day of January 2024.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர். **1** ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**, 2** ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4** ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5** ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6** ம் எதிரி கேசவன்**, 7** ம் எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8** ம் எதிரி தமிழரசன்**, 10** ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11** ம் எதிரி கலைச்செல்வன்**, 12** ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**.**

**9** ம் எதிரி அஜீத்குமார் ஆஜர் இல்லை**. 9** ம் எதிரி சார்பில் குவிமுச பிரிவு **317** ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.**

**3** ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

<u>**முதல் விசாரணை**</u>

நான் திருச்சி அயல் குடிவரவு பணியகத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். நான் கடந்த 31.12.2020 அன்று கரூர், மாவட்ட குற்ற ஆவண காப்பகத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது, கரூர் நகர உட்கோட்ட

காவல்துணை கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து, கரூர் நகர கா.நி.கு.எண். 1031/2020 வழக்கு சம்மந்தமாக வரப்பெற்ற வேண்டுகோள் படி, மேற்சொன்ன வழக்கு சம்மந்தப்பட்ட TN 63 AW 6699 என்ற வெர்னா கார், TN 47 AM 6022 மற்றும் TN 38 AE 4282 ஆகிய வாகனத்தின் உரிமையாளர் சம்மந்தாக NCRB போர்ட்டலில் உள்ள வாகன் சம்மன் வெகிக்கிள் என்ற போர்ட்டலில் கணிணியில் பார்வையிட்டதில், TN 63 AW 6699 என்ற வாகனம் அரவிந்தகுமார், த/பெ. சுந்தர்ராஜ், அருகம்பாளையம், காதப்பாறை, கரூர் என்பவர் பெயரிலும், TN 47 AM 6022 என்ற வாகனம் சக்திவேல், காந்திநகர், தாந்தோணிமலை என்பவர் பெயரிலும் பதிவாகியுள்ளதும், TN 38 AE 4282 என்ற வாகனம் மேற்சொன்ன வாகன் சம்மன் போர்ட்டலில் உள்ள பதிவுகளில் துலங்கவில்லை தெரியவந்தது. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1, 2** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் மாவட்ட குற்றப்பதிவு அலுவலகத்தில் பணிபுரிகிறேன். நான் மேற்சொன்ன விவரங்கள் மாவட்ட குற்றப்பதிவகத்தில் உள்ள கணிணி பதிவுகளில் உள்ள விவரங்கள் ஆகும். அந்த கணிணி எந்த நிறுவனத்தில் தயாரிக்கப்பட்டது, யாரால் பராமரிக்கப்படுகிறது என்று சொல்லவில்லை. நான் 65 பி சான்றிதழ் அளிக்கவில்லை. எனது சாட்சியம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் சொன்னபடி நான் கணிணியில் பார்வையிடவில்லை என்றும், நான்சொன்னபடி பதிவுகள் எதுவும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

மறு விசாரணை

இல்லை.